Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 10 | [28-05-93] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 94

## யாழ். ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்ரேகருவி ஜேர்மன் நிதிஉதவி மூலம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான எக்ஸ்ரே கருவித் தொகுதியைக் கொள்வனவு செய்வதற்கான நிதி ஜேர்மன் தூதரகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கென 3 கோடியே 30 இலட்சம் ரூபாவிற்கான காசோலை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்கு ஜேர்மன் தூதரகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுப் பணிக்காக ஜேர்மன் அரசு வழங்கியுள்ள 11 கோடியே 30 இலட்சம் ரூபா உதவித் தொகையிலிருந்தே இந்நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிதியைக் கொண்டு நவீன எக்ஸ்ரே கருவித் தொகுதியை வாங்குவதற்கான முயற்சியில் வைத்தியசாலை நிர்வாகம் ஈடுபட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

# தேசிய சுய உணர்வை தட்டி எழுப்பி போராட ஊக்குவிப்பவர் கலைஞர்கள்

## தலைவர் பிரபாகரன் படைப்பாளிகளுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்கசக்தியை ஊட்டுபவர்கள் கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்குச் செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே, இந்த இலக்கில் எமது தேசத்துக் கலை இலக்கிய படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்துவருகின்றனர்.

இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்ற 'இது எங்கள் தேசம்' வீடியோபட வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலைஞர்களைப் பாராட்டி விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வீடியோ படம் முல்லை மாவட்ட விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பாராட்டுச்செய்தியின் முழு விபரமும் வருமாறு;

உலக வரலாற்றின் புதிய அத்தியாயமாக, இங்கு, எமது தாயக மண்ணில் ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்கள் பலர் அவர்களின் தனி மனித சரித்திரங்களின் தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது தேசத்தின் தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாகத் தந்துள்ள முல்லை மாவட்டக் கலைஞர்களை நான் மெச்சுகின்றேன்.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்கசத்தியை ஊட்டுபவர்கள்



கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## திலக் பரணகம ஓய்வு

மேஜர்ஜெனரல் திலக் பரணகம தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். தென்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாட்டுப் பொறுப்பாளராக இவர் பதவி வகித்துவந்தார்

[illegible] புதன்கிழமை முதல் ஓய்வுபெற்ற இவரது பதவிக்கு இராணுவத் தொண்டர்படையில் கடமையாற்றிய மேஜர்

( 4 ஆம் பக்கம் பார்க்க ;

## இலங்கைச் செஞ்சிலுவை கொழும்புக் கிளைத் தலைவர் நாளை யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையக தலைவர் டி டி. அபேயசிங்கா உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ். கிளைத் தலைமையகத்திற்கு நாளை திங்கட்கிழமை வருகைதரவுள்ளார்.

இவர் நாளை அமரரான முன்னாள் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையின் உபதலைவர் க. புவனேந்திரன் அவர்களின் உருவப்படத்தினை காலை 10-00 மணிக்கு திறந்து வைத்து அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பங்குபற்றவுள்ளார்.

மேலும் இவர்கிளை அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பு ஒப்பந்தம்

(கொழும்பு)

மாகாணசபைகளில் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து செயற்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் ஜ. ஐ. தே. மு. சார்பில் காமினி திசாநாயக்காவும், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் டி. எம். ஜயரட்ணாவும் நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திட்டனர்.

## சிறிலங்கா மீனவர் கைது

(கொச்சி)

இந்திய கடலோரக் காவற் படையினர் கடந்த வாரத்தின் இறுதியில், ஆறு இலங்கை மீனவர்களுடன் மீன்பிடி இழுவைப் படகொன்றைக் கைப்பற்றினர்.

கச்சதீவுக்கு அருகே இந்திய கடற்பிராந்தியத்தில் வைத்து இப் படகு கைப்பற்றப்பட்டது.

## அகதிகளுக்கு இத்தாலி உதவி

(கொழும்பு)

இத்தாலிய அரசாங்கம் வடக்கிலும், கிழக்கிலும் இருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக எண்நூறு மெட்ரிக் தொன் அரிசியை அன்பளிப்பாகவழங்கியுள்ளது. இந்த அரிசியை உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சு அடுத்த மாதத்தில் கொழும்பில் பொறுப்பேற்கவுள்ளது.

## பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படை அகோரத் தாக்கு;

## 'இது எங்கள் தேசம்' வீடியோ படத்திற்கு

இவர் நாளை அமரரான முன்னாள் இலங்கைச் செஞ் ... தப்படும் செயற்திட்டங்களை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## எதிர்க் கட்சிகள் ஒத்துழைப்பு ஒப்பந்தம்

(கொழும்பு)

மாகாணசபைகளில் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து செயற்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் ஐ. ஐ. தே. மு. சார்பில் காமினி திசாநாயக்காவும், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் டி. எம். ஜயரட்ணாவும் நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திட்டனர்.

மையும் கொடுப்பவர்களும் அவர்களே, இந்த இலக்கில் எமது தேசத்துக் கலை இலக்கிய படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்துவருகின்றனர்.

இவ்வாறு நேற்று யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்ற 'இது எங்கள் தேசம்' வீடியோபட வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலைஞர்களைப் பாராட்டி விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வீடியோ படம் முல்லை மாவட்ட விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பாராட்டுச்செய்தியின் முழு விபரமும் வருமாறு;

உலக வரலாற்றின் புதிய அத்தியாயமாக, இங்கு, எமது தாயக மண்ணில் ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்கள் பலர் அவர்களின் தனி மனித சரித்திரங்களின் தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப்படுகிறது.

எமது தேசத்தின் தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாகத் தந்துள்ள முல்லை மாவட்டக் கலைஞர்களை நான் மெச்சுகின்றேன்.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வைத் தட்டி எழுப்பி, தேசிய போராட்டத்திற்கு ஊக்கசத்தியை ஊட்டுபவர்கள்



கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## அகதிகளுக்கு இத்தாலி உதவி

(கொழும்பு)

இத்தாலிய அரசாங்கம் வடக்கிலும், கிழக்கிலும் இருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக எண்நூறு மெட்ரிக் தொன் அரிசியை அன்பளிப்பாகவழங்கியுள்ளது. இந்த அரிசியை உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சு அடுத்த மாதத்தில் கொழும்பில் பொறுப்பேற்கவுள்ளது.

### பருத்தித்துறை கடற்பரப்பில்

# கடற்படை அகோரத் தாக்கு; மீனவருக்கு பெரும் சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் அகோர பீரங்கி வேட்டுக்களையும், ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டதில் கடற்பிராந்தியம் மூன்று மணித்தியாலங்களாக அதிர்ந்தது.

நேற்று முன்தினம் இரவு இக் கடற்பரப்பில் ரோந்துசென்ற கடற்படையினர் கண்ணில் தென்பட்ட மீனவர்கள் மீது 8 மணிமுதல் 11 மணிவரையில் தாக்குதலை மேற்கொண்டதில் மீனவர்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மீனவர்களை சுற்றிவளைத்த கடற்படையினர் பலமாகத் தாக்கியும் அவர்களது பொருள்களை சேதப்படுத்தியதோடு மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் நாசப்படுத்தியுள்ளனர்.

கண்மூடித்தனமான கடற்படையினரின் இத் தாக்குதல்களால் என்ஜின்கள், வலைகள் வள்ளங்கள் போன்றவற்றிற்கு பலத்த சேத மேற்பட்டிருக்கலாமெனவும் நம்பப்படுகிறது. எனினும் சில படகுகளும், மீனவர்களும் கரைவந்துசேராததினால் உறவினர்களின் உதவியினால் அவர்கள் பின்னர் மீட்கப்பட்டனர். [யோ]

## தொலைக்கல்வி நிலையம் வடபகுதியில் மூடப்படும்

(கொழும்பு)

வடபகுதிக்கான தொலைக் கல்வி நிலையம் மூடப்படவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரியில் தொலைக்கல்வி நிலையம் இதன் காரியாலயத்தை அமைத்து இயங்கி வருகிறது

தொலைக் கல்வி நிலையத்தை மூடுமாறு ஓர் அதிகாரி செய்த சிபார்சின் பேரிலேயே கல்வி அமைச்சு இந் நிலையத்தை மூட உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தொலைக் கல்வி நிலையம் ஆசிரியர் பயிற்சி நெறிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மீட்புநிதி சேகரிக்கப்படவுள்ளது.

இதன்படி காலை 9.00 மணி முதல் 10.00 மணிவரை வலிகாமம் தீவக பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்டோர் நல்லூர்மங்கையர்க்கரசிமகாவித்தியாலயத்திலும், காலை 11.30 முதல் 12.30 வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்டோரும், சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவிற்கு உட்பட்டோர் சங்கத்தானை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மாலை 3.00 மணிமுதல் 4.00 மணிவரையும் தமது மீட்பு நிதியைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் திரு. வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

### 'இது எங்கள் தேசம்'

# வீடியோ படத்திற்கு தலைவர் பிரபாவின் பரிசு

(யாழ்ப்பாணம்)

'இது எங்கள் தேசம்' வீடியோ படத்திற்கு தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளார். நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இவ் ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் இப்பரிசை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் வழங்கினார்.

இவ்வெளியீட்டு விழாவிற்கு முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் சங்கர் தலைமை வகித்தார்.

மங்கள விளக்கை யாழ். மாவட்ட தளபதி அன்பு, மகளிர் படையணியை சேர்ந்த விதுசா ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வீடியோ பட நாடாவை வெளியிட்டு வைத்தார் முதலாவது பிரதியை நிதர்சனம் பொறுப்பாளர் ஜவான் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளியீட்டு உரையை தமிழீழ கலை பண்பாட்டு கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழீழ தேசியத் தலைவரின் பரிசை தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கினார்.

இப் படத்தின் மதிப்புரையை பேராசிரியர் சிவத்தம்பி, கோகிலா மகேந்திரன், சோ. பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். அடுத்து நன்றியுரையை கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அன்பரசன் அவர்கள் நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து "இது எங்கள் தேசம்" வீடியோ படம் காண்பிக்கப்பட்டது. (சி)

## காலப்பதிவு இலக்கியங்கள் கலைஞர் படைக்க வேண்டும்

### புதுவைஇரத்தினதுரை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாம் எவ்வளவு இன்னல்கள் மத்தியில் எமது சுதந்திரத்தை பெற்றோம் என்பதை எமது வருங்கால சந்ததியினருக்கு உணர்த்த வேண்டும். இதற்கு நாம் காலப்பதிவு இலக்கியங்களை படைக்க வேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று வெளியிடப்பட்ட 'இது எங்கள் தேசம்' என்ற வீடியோ பட வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

நாம் எவ்வாறு எமது சுதந்திரத்திற்காக போராடினோம் எவ்வளவு இன்னல்களுக்கு ஆளானோம் என்பதையெல்லாம் எமது வருங்கால சந்ததியினருக்கு நாம் புரியவைக்க வேண்டும் அப்போதுதான்அவர்களுக்குஎமது சுதந்திரத்தின் பெறுமதி தெரியும். அதற்காக எம் மத்தியில் உள்ளஎழுத்தாளர்களும் கலைஞர்களும் தம்மால் ஆன பணியை ஆற்ற வேண்டும். இல்லையேல் எமது வருங்கால சந்ததி எமதுபோராட்டத்தை பற்றியும் அதன் பெறுமதி பற்றியும் அறியாது நாம் எவ்வளவோ இன்னல்களை அனுபவித்து எவ்வளவோ இழப்புக்களின் மத்தியில் நாம் பெற்ற

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழீழ பொது கல்வி தேர்வு செப்டெம்பர் 28 ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு இப் பரீட்சை நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் இப் பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் இம்மாத இறுதியில் உரிய கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 91 உத்தியோகத்தர்களுடன் 'குமண' திருமலைக்கு!

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்த 'குமண' கப்பல் நேற்று பிற்பகல் 91 உத்தியோகத்தர்களுடன் திருக்கோணமலை நோக்கி புறப்பட்டது. இக் கப்பல் இன்று காலை அங்கு சென்றடைந்ததும் யாழ்.வரும் நோயாளிகளை ஏற்றிக்கொண்டு நாளை காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும்.

நாளைமாலையே கொழும்பு செல்லவுள்ள நோயாளிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் திருக்கோணமலைக்குப் புறப்படுச்சென்று அங்குநோயாளிகளைப் பாரப்படுத்தி விட்டு கப்பல் கொழும்புக்குச் செல்லும். நேற்று புறப்பட்ட இக் கப்பலில் யாழ். தபால் திணைக்களம் 42 தபால் பொதிகளை அனுப்பி வைத்துள்ளது இக் கபபலில் ஒரு மாதமாக துயிலுறும் தபால் பொதிகளும் கூடவே செல்கின்றன.

மற்றும் பருத்தித்துறையில் நிற்கும் 'மரினால்' கப்பல் இன்றுடன் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு மாலை புறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

# அரசாங்க தலைவர்களின் பாதுகாப்பில் மாற்றம்

### பிரேமாவின் பாதுகாப்பு குழு கலைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின கொலைக்குப் பிறகு அரசாங்கக் கட்சித் தலைவர்கள் பாதுகாப்பு ஒழுங்குகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது

டி.பி.விஜயதுங்கா பிரதமராக இருந்தபோது பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் பாதுகாப்புக் குழுவே அவர் ஜனாதிபதியாகிய பிறகும் அவருக்குத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கி வருகிறது. கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசாவுக்குப் பாதுகாப்பு வழங்கிய ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு பொலிஸ் பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் கொலைக்குப் பிறகு அவர்கள் தாமாகவே இடமாற்றம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி-விஜயதுங்காவின் பாதுகாப்புக்கென மேலும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மாமடுவ காவலரண் மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

வவுனியா மாமடுவ இராணுவக்காவலரண்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதாக பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன. சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இம் மோதலின் போது பலத்த துப்பாக்கிச் சண்டையும் ஷெல் பிரயோகமும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இம்மோதல் கடந்த செவ்வாய் இரவு நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்


### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல்இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

### றெனி மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4918)

### டைனமோ (DYNAMO) தேவை

10K V க்கும் 15K V க்கும் இடைப்பட்ட நல்ல நிலையில் உள்ள தனி (DYNAMO) உடன் தேவை வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். துரை மோட்டார் உயிரூட்டகம் பருத்தித்துறை வீதி கொடிகாமம் (சி/6670)

### மலை வேப்பம் விதை

மலை வேப்பம் விதை நாற்று மேடைப் பயன்பாட்டுக்குத் தேவை. தொடர்பு:- மில்க்வைற் (சி/6669)

### விற்பனைக்கு

வீடியோ கமரா பாவித்தது M 7 புதியது பாவிக்காதது M 7 நீகல் வீடியோ கடற்கரை வீதி. ஈச்சமோட்டை யாழ்ப்பாணம். (சி/6671)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள். றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)


### தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபம்

[தொல்புரம்]

குடாநாட்டிலுள்ள பிரதேச

## யூ.என்.எச்.சி.ஆர் கோரிக்கை இந்திய அரசால் நிராகரிப்பு

(சென்னை)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் தாயகம் ஏற்றிவருவதற்கான செலவை அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயம் ஏற்றுக் கொள்ள முன்வந்த போதிலும் இதைஏற்கஇந்தியஅரசுதயங்கி வருகிறது.

யூ என். எச். சி ஆர். தனது செலவில் இரு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி அகதிகளை மன்னாருக்கும் திருமலைக்கும் கொண்டுவர முன்வந்தது. இது குறித்து மத்திய அரசுக்கும் அறிவித்தது. எனினும் இதுவரை மத்திய அரசடமிருந்து எந்தவிதமான தகவலும் வரவில்லை என டில்லியில் உள்ள யூ. என்.எச். சி. ஆர் வட்டாரங்கள் தெரிவித்தன

முன்னர் அகதிகளை கப்பலில் ஏற்றிவரும் செலவை ஏற்க முடியாது என இந்திய அரசும் சிறிலங்கா அரசும் இழுபறிப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 500 ரூபா கள்ள நோட்டு தெரணியகலையில் புழக்கம்

சிறிலங்காவில் மீண்டும் கள்ளநோட்டுகள் புழககத்தில் உள்ளதாகதெரிவிக்கபடுகிறது.

கடந்த வாரம் 500 ரூபா கள்ளநோட்டு தெரணியகலை பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளது இதன் இலக்கமும் ஏனைய குறைபாடுகளும் முன்னைய நோட்டுகளின்படியே இருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கள்ளநோட்டு றூரி தோட்டத்தில்சிங்களஇளைஞர் ஒருவரால் உடை தைப்பதற்கு முற்பணமாக இங்குள்ள தையற்காரர் ஒருவருக்கு கொடுக்கப்பட்டதாகவும் அதை அவர் பொலிசாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

### சிறுவர் நிதிய அதிகாரிகள் யாழ். வந்தனர்

(வடமராட்சி)

அரச சார்பற்ற சிறுவர் பராமரிப்பு நிதியத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் நேற்று யாழ் வந்தடைந்தனர். இவர்கள் கொழும்பிலிருந்து விமானம் மூலம பலாலிக்கு வந்து பின்னர் 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தனர். (யோ)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப் பிறப்பு 21 — 03 — 1972



வீரச் சாவு 14 — 06 — 1991

### கப்டன் சுஜாததா

(யோகராசா அனுசுயா, திக்கம்)

திதி: 23-05-1993

இச்சைபோல் இருந்து வாழ
ஈப்புழு எறும்பும் கோணும்
உச்சமாய் மனித ஜென்மம
சுதந்திர உணர்ச்சி இன்றி
நச்சசனும் அடிமை வாழ்வை
நயநதிட ஞாய முண்டோ
நிச்சய சபதம பூண்டு

## தற்காலிக வகுப்பறை அமைக்க கோரிக்கை

(நெல்லியடி)

''அண்மைக் காலங்களில் எமது பிரதேசங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பலாலி, மயிலிட்டி, மாதகல், காங்கேசன்துறை, தெல்லிப்பழை போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்த குடும்பங்களைச் சேர்ந்தசுமார் 122 மாணவர்கள் எமது பாடசாலையில் தமது கல்வியைத் தொடர்ந்து கற்று வருகின்றார்கள். ஏற்கனவே இங்கு இருக்கும் வகுப்பறைகள் முன்பிருந்த மாணவர்களுக்கே போதுமானது. இதனால் இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயில கஷ்டமடைகின்றார்கள். இந்த உடனடித் தேவையைக் கருத்தில் கொண்டு 40 அடி நீளம் 20 அடி அகலமுடைய தற்காலிக வகுப்பறைகளை அமைத்துத் தரவும்.''

இவ்வாறு கோரும் மகஜர் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் திரு. எஸ். கந்தசாமியினால் எழுதப்பெற்று, தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். தலைமையகத்திற்கும், வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளருக்கும் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மெய்வல்லுநர் போட்டிகள்

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 24, 25, திகதிகளில் வடடுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இப்போட்டியின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் திருமதி தேவராணி சுந்தரலிங்கம் வெற்றியீட்டுவோருக்கான விருதுகளை வழங்குவார்.

★

பளைக் கொத்தணி தர்மக்கேணி அ. த க பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு - 1993 நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிககு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது

### முத்திரை இடல்

(தொல்புரம்)

யாழ். நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தினரால் வலிமேற்கு சுழிபுரம் பிரதேச சபையைச் சார்ந்தவரினது நிறுவை, அளவை உபகரணங்களுக்கு 1993 ஆம் ஆண்டிற்கான முத்திரை இட்டுக் கொடுக்கப்படுகிறது

எதிர்வரும் 25ஆம் திகதி வரை வலிமேற்குபிரதேசசபை சுழிபுரம் உபஅலுவலகத்திலும், 27ஆம் திகதி முதல் யூன் 9ஆம் திகதி வரை சங்கானை உபஅலுவலகத்திலும், யூன் 11ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திலும் முத்திரை இடப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (41)

### குடும்பஸ்தர் நஞ்சருந்தி தற்கொலை

[தென்மராட்சி]

வீட்டில் குடும்பத்தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;வேம்பிராய்கொடிகாமத்தைச் சேர்ந்த சண்முகம் கனகசபை (வயது 62) என்பவரே மரணமானவராவார். இவர் குடும்பத் தகராறு காரணமாக தனது தோட்டத்தில் இருந்த கிருமிநாசினி மருந்தை எடுத்து அருந்தியதாகவும், பின்பு மருத்துவமனைக்கு கொணடு செல்ல முன்பே மரணமானார் எனவும்இவரின் மரணம் தொடர்பாக சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரிதிரு. ந. தர்மேந்திரன் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தீர்மானிக்கப்பட்டது.இச்சம்பவம் சென்ற கிழமை இடம் பெற்றது. (86)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1992

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப் படிப்பின் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து

## செய்தியாளர்களிடமிருந்து ரணில் பிரியாவிடை

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்களைச் சந்திப்பதிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமையன்று பிரியாவிடை பெற்றுக்கொண்டார்

புதிய அமைச்சரவைப் பேச்சாளராக வெளி விவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தைஅறிமுகம் செய்துவைத்த பிரதமர் ரணில் அங்கு வைத்து தான் கூறியவற்றை விடவும் குறைவாக கூறுவது நல்லது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத்திற்கு ஆலோசனையும் வழங்கினார்.

## சட்ட நடவடிக்கை எடுக்க எதிரணிகள் ஆலோசனை

வடமேல் மாகாணம் மற்றும் தென்மாகாணங்களின் ஆளுநர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பாக எதிரணியினர் ஆய்வு செய்து வருவதாக கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாகாண சபைத் தேர்தல்களையடுத்து முதல்வர்களைத் தெரிவு செய்வதில் இந்த ஆளுநர்கள் அரசியலமைப்பை மீறிச் செயற்பட்டதாக எதிரணியினர் குற்றம் சாட்டியிருப்பது தெரிந்ததே.

## நோயாளர் பராமரிப்பிற்கு விடுதி ஆரம்பிக்கப்படுகிறது

### புற்றுநோய் தடுப்பு சங்கம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகால நோயாளர்களுக்கான பராமரிப்பு நிலையம் ஒன்றை வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

அங்கவீனம் அடைந்தமையாலும், வேறு நோய்கள் காரணமாக இயங்கமுடியாத நிலைக்கு உள்ளாகியும் இருக்கும் சிலர் வசதியிருந்தும் பராமரிப்பதற்காக உற்றார் உறவினர் இல்லாத நிலையில் இருக்கின்றார்கள் என்பதை கவனத்திற் கொண்டு அவர்களுக்கு உதவும் முகமாக இப்பராமரிப்பு நிலையம் திறக்கப்படவுள்ளது.

காலஞ்சென்ற வைத்திய கலாநிதி ''பிலிப்ஸ்' ஞாபகார்த்த விடுதியின் ஒரு பகுதியில் இந்தப்புதிய பராமரிப்பு நிலையம் செயற்படும். புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கான விடுதி இவ்விடுதியின் ஒரு பகுதியில இயங்கி வருவது தெரிந்ததே.

### புதிய நியமனம்

இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக முன்னாள் சிவில்சேவை அதிகாரியான சிறிவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். டந்த வியாழனன்று பதவி துறந்த கல்பஹேவாவின் இடத்திற்கே இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### விளையாட்டு

அரியாலை அருணோதயா சனசமூக நிலையம் 33 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் செற்றப் முறையிலான கரபந்தாட்டம், வலைபந்தாட்டம் என்பவற்றை நடத்தி வருகின்றது. இப்போட்டித் தொடரில் நாளை சென் அன்ரனி ஏ அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழக பி அணி மோதவுள்ளது. பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் நடைபெறும் இப்போட்டியை அடுத்து நல்லூர் தெற்கு ச.ச. நிலைய அணியை எதிர்த்து அரியாலை ஐ. வி. கழக ஏ அணி மோதவுள்ளது.

## நினைவு கூருகின்றோம் ...

### 1993-05-23

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

நடேஸ் (வைத்திலிங்கம் கேதீஸ்வரன்-புங்குடுதீவு-03 -யாழ்)

1987 ஆம் ஆண்டு மட்டு-புல்லுமலைப்பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

M 7 புதியது பாவிக்காதது M 7 நீஷல் வீடியோ கடற்கரை வீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணம். (சி/6671)

## உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)

## தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபம்

[தொல்புரம்]

குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு தனிச் சிங்கள மொழியில் அச்சடிக்கப்பட்ட வறுமை நிவாரண உணவு முத்திரை வழங்கல் தொடர்பான படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இப்படிவங்கள் கொழும்பில் இருந்து யாழ். செயலக சமூக சேவைப் பகுதியினருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், இவை வறுமை நிவாரண எட்டாவது தொடர் உணவு முத்திரைகளை வழங்கப்படுவதற்குரிய விவரணப் படிவங்களே தனிச் சிங்கள மொழியில் அச்சடிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிய வருகிறது. [41]

## கூட்டம்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் சங்கீதம் நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று நாளைதிங்கட்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

## வருடாந்த திருவிழா

(உரும்பராய்)

உரும்பராய் பர்வத வர்த்தனி அம்மன் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் புதன்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது அடுத்தமாதம் 3-ம்திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


★ ★

(யாழ்ப்பாணம்)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் புதன்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது அடுத்த மாதம் 3-ம் திகதி வியாழக்கிழமை காலை இரத உற்சவமும், 4ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

---

21 — 03 — 1972



14 — 06 — 1991

## கப்டன் சுஜாததா

(யோகராசா அனுசுயா, திக்கம்)

திதி: 23-05-1993

இச்சைபோல் இருந்து வாழ
ஈப்புழு எறும்பும் கோணும்
உச்சமாய் மனித ஜென்மம
சுதந்திர உணர்ச்சி இன்றி
நச்சசனும் அடிமை வாழ்வை
நயநதிட ஞாய முண்டோ
நிச்சய சபதம பூண்டு
சுதந்திரம நிலைக்கச் செய்வோம்
- நாமக்கல் கவிஞர்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் இயக்க நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி.

''தர்மவாசா'',
திக்கம். — குடும்பத்தினர்.

(4930)

## 1-ம் ஆண்டுநினைவலைகள்



தாயின் மடியில்
12-08-1969

தாயக மண்ணில்
03-06-1992

திதி: 23-05-1993

### லெப். ஈழவன் [பிறேம் மாஸ்ரர்]

[ஐயாத்துரை சண்முகேஸ்வரன்]

வேகும் எம் மண்ணுக்காய்
தாகம் கொண்டெழுந்த வீரா! -நின்
தேகம் துயில் கொள்ளும் பூமி
ஓர் நாள் - நின்
தியாகங்கள் சூல் கொண்ட மேக
மழையில் நனையத்தான் போகிறது.
இது திண்ணம்

23-05 93 ஞாயிற்றுக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலியில் போராளிகள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

''கௌரி இல்லம்'' —குடும்பத்தினர்.
தேவரையளி.

(4916)

---

...1993 நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1992

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பின் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், தமிழ், அரசறிவியல், சமஸ்கிருதம், கிறிஸ்தவநாகரிகம், வரலாறு, மெய்யியல், மொழியியல், நுண்கலை. நாடகமும், அரங்கியலும்.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்ப படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 24-05-1993லிருந்து 05 06 1993-ம்திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களை பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்ப படிவம் பெறவரும் போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால்மூலம் பெறவிரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 08/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12-06-93க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும. 12-06-93 க்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
21 05 1993

(6674)

---

கனகசபை (வயது 62) என்பவரே மரணமானவராவார். இவர் குடும்பத் தகராறு காரணமாக தனது தோட்டத்தில் இருந்த கிருமிநாசினி மருந்தை எடுத்து அருந்தியதாகவும், பின்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முன்பே மரணமானார் எனவும்இவரின் மரணம் தொடர்பாக சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரிதிரு. ந. தர்மேந்திரன் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இச்சம்பவம் சென்ற கிழமை இடம் பெற்றது. (86)

## UNIVERSITY OF JAFFNA SHRI LANKA

### MASTER OF PHILOSOPHY QUALIFYING EXAMINATION 1992 FACULTY OF ARTS

Application are invited from Pass Degree Candidates for the above examination in the following subiects:

Economics, Geography, Hindu Civilization, Tamil, Sanskrit, Political Science, Christian Civilization, History, Philosophy, Linguistics, Fine Arts and Drama & Theatre Arts.

Application forms could be obtain from the Office of the Dean, Faculty of Arts in person or by post from 24th, May upto 05th June 1993.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for payment of Rs.10/-. Those who wish to obtain the forms by post are required to send a Money order/ Postal order drawn in favour of Bursary University of Jaffna together with a Self-addressed envelope affixing stamp to the value of Rs 8/-

Completed application forms should be submitted to the Office to the Dean, Faculty of Arts on or before June 12th, 1993.

Applications received after this date will not accepted.

REGISTRAR
University of Jaffna.
21-05-1993

---

...டுத்தாபனத்தின் புதிய தலைவராக முன்னாள் சிவில்சேவை அதிகாரியான சிறிவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார். டந்த வியாழனன்று பதவி துறந்த கல்பஹேவாவின் இடத்திற்கே இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழக பி அணி மோதவுள்ளது. பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் நடைபெறும் இப்போட்டியை அடுத்து நல்லூர் தெற்கு ச.ச. நிலைய அணியை எதிர்த்து அரியாலை ஐ. வி. கழக ஏ அணி மோதவுள்ளது.

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-23

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

நடேஸ் (வைத்திலிங்கம் கேதீஸ்வரன்-புங்குடுதீவு-03 -யாழ்)

1987 ஆம் ஆண்டு மட்டு-புல்லுமலைப்பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

★ வீராசீனன் (சிவக்கொழுந்து சிவலிங்கம்-மட்டு)

★ கிருபை (இளையதம்பி கிருபைரத்தினம்-ஆயித்தியமலை-மட்டு)

★ சந்திரன்/சாந்தன் (சதாசிவம் சந்திரமோகன்-நாவற்காடு-மட்டு)

1988 ஆம் ஆண்டு மணலாறு-நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

2-ம லெப். ஜீவன் (சுந்தரலிங்கம் ரகுநாதன்-தென்னமரவடி-திருமலை)

1989 ஆம் ஆண்டு திருமலை-மூதூர் 64-ம் கட்டைப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட,

★ அமிர்தம் (நடராசா அமிர்தலிங்கம்-மல்லிகைத்தீவு மூதூர்-திருமலை)

★ ஹசாலி (சேகுமுகமட் சகாப்தீன் – ஆலிம்சேனை, மூதூர்-திருமலை)

கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட கனகபுரத்தைச் சேர்ந்த பிரஜைகள் குழு பிரமுகர்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

தீசன் [மயில்வாகனம் ராஜு - பெரியதம்பிரான் வீதி, அக்கரைப்பற்று-அம்பாறை]

மன்சூர் (காத்தமுத்து ஜெகதீசன்-கண்ணகிபுரம், வாழைச்சேனை-மட்டு)

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட களுவங்கேணி 02 ஐச் சேர்ந்த கூலித்தொழிலாளியான தமிழ் இளைஞன்.

1992 ஆம் ஆண்டு திருமலை-மூதூர், பச்சனூர் முகாமிலிருந்து வெளியேறி ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

கப்டன் மதியழகன்/அரி (ஏகாம்பரம் கெங்காதரன் சிவன் வீதி.-திருமலை)

முல்லைத்தீவு வற்றாப்பளையில் சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரு பெண்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6672)

சிந்தனைக்கு

பிறரை ஏமாற்ற துணிந்து முனையும்போது நமக்கே சிலந்தி வலையைப் பின்னி விடுகிறோம்.
— ஸர் வால்டர் ஸ்காட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## 'ஜனநாயகத்தில்' புதிய மரபுகள்

தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றில் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறிய ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அமைக்குமாறு ஆளுநர் அழைத்தமை சிறிலங்கா அரசியலில் மீண்டும சிக்கல்களை உருவாக்குவதாக மாறியுள்ளது இவ் இரு மாகாணங்களிலும் ஐ. தே. கட்சி தனிப் பெரும் கட்சியாக அதிக ஆசனங்களைப் பெற்றிருப்பினும், அது ஆட்சி அமைக்கக் கூடிய அளவில் அறுதிப பெரும்பான்மையைப் பெறவில்லை.

இதேவேளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைந்து தமக்கு அறுதிப் பெரும்பான்மை இருப்பதால் தம்மை ஆட்சி அமைக்க அழைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள வேளையிலும் ஐ. தே. கவை ஆளுநர் ஆட்சி அமைக்க அழைத்தமை ஒரு 'ஜனநாயக மரபை' மீறிய செயல் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

இவ் இரு மாகாணங்களின் ஆளுநர்கள் இருவரும் ஜனநாயக மரபுகளின் நடைமுறைகளின் படியும் நாட்டின் நலன் கருதியும் நடப்பவர்களானால், பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சிக்கே ஆட்சியை அமைக்கும் உரிமையைக் கொடுத்திருக்க வேண்டும். இதேவேளை இவ்விரு மாகாணங்களிலும் ஐ. தே. க. தனது பெரும்பான்மையை நிரூபிக்கக் கூடிய அரசியல் சூழல் தற்போதைக்கு இல்லை என்பதும் எவரும்விளங்கிக்கொள்ள முடியாததல்ல.

ஆனால், ஆளுநர்கள் ஐ. தே. கட்சியை ஆட்சி அமைக்குமாறு அழைத்தமையானது தமது பதவிக்கே அவர்கள் ஏற்படுத்திய இழுக்காகும். இவர்களின் இந்நடவடிக்கையானது தனியாக ஐ. தே. கட்சிக்குத் தமது விசுவாசத்தை வெளிக்காட்டியது மட்டுமல்ல. சிறிலங்கா அரசியலமைப்பில், ஆட்சி அமைப்பது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் விதிகளை மீறிய செயலுமாகும்.

இதேவேளை ''மாகாண சபை ஆட்சியை அமைக்க யாரை அழைப்பது என்பது மாகாணங்களின் ஆளுநரைப் பொறுத்த விடயம்'' எனக் கூறுவதன் மூலம் இவ்விவகாரத்தில் தமக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என ஜனாதிபதி டி. பி.

# அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் இந்திய வழியில் சுவிஸ்

இலங்கை இனப்பிரச்சினையின் எதிரொலியாகத் தாய் மண்ணை விட்டு வெளியேறி ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தமிழர்கள் தஞ்சமடைந்தனர்.

இந்த வகையில் சுவிட்சர்லாந்துக்கு வருகைதந்த இலங்கைத் தமிழ் அகதிகள் சுமார் 25,000 பேர் எனலாம். இவர்களில் 250 க்கு மேற்பட்டோர் தொடர்ந்தும் சுவிஸில் வாழக் கூடிய அனுமதியுடையவர்கள். அதாவது அகதியுரிமை அங்கீகரிக்கப்பட்டவர்கள் எனலாம். இவர்களுக்கு அடுத்த கட்டமாக 5,000க்கு அதிகமானோர் மனிதாபிமான அடிப்படையில் [5 வருடத்திற்கு மேல் சுவிஸில் வாழ்ந்தவர்கள்.] 'பி' கார்ட் பெற்றுள்ளனர்.

அடுத்த அணியினரான 01-09-1992 க்கு முன்னர் சுவிட்சர்லாந்திற்கு வந்தவர்கள் 17,000 பேர் உள்ளனர். இவர்கள் இதுவரை சுவிஸ் அரசால் எந்த முடிவும் எடுக்கப்படாதவர்கள். இறுதி அணியினரான செப்டம்பர் 1992 க்குப் பின்னர் சுவிட்சர்லாந்திற்கு வந்தவர்கள் 800 பேர் உள்ளனர். இவர்களில் அநேகமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 800 அகதிகளில் தஞ்சமனுக்களை சுவிஸ் அரசு விசாரணை செய்து ஒரு பகுதிக்கு முடிவும் அறிவித்து விட்டது. இவர்களில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அகதிகளை நாட்டை விட்டு வெளியேறும் படி காலக்கெடுவும் அரசு வழங்கியுள்ளது. ஆனால் இந்த அகதிகளின் விண்ணப்பங்களை உடன் விசாரித்தமைக்கு சுவிஸ் அரசு சொல்லும் காரணங்கள் இவர்கள் இந்திய ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளனர் என்பதாகும். எனினும் சுவிஸ் அரசு அகதிகளைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுப்பதற்கு இதைத் தவிர இன்னும் பல காரணங்கள் உண்டு.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்குக் காரணம் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும், இந்தியாவிலும் இருந்து வந்தவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டமை என்று சுவிஸ் அரசு கூறினாலும் நாட்டில் அதிகரித்து வரும் வேலையில்லாப் பிரச்சினைதான் இதற்குக் காரணம் ஆகும்

தற்போது சுவிஸ் பாரிய பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. சுவிஸ் 1992 டிசம்பரில் ஐரோப்பிய

னித்தனர். இம்மக்கள் இணையக்கூடாது என்பதற்கு சொல்லும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான். அதாவது சுவிஸ் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் இணையுமானால் மேலும் சுவிட்சர்லாந்துக்கு வெளிநாட்டவர் வருகை அதிகரிக்கும். இதனால் தற்போதுள்ளவேலைஇல்லாப் பிரச்சினை மேலும் மோசமடையும் என்பதாகும். ஆனால் ஐ. பொ. ச சுவிஸ் இணையாவிடின் சுவிஸ் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினையை இம்மக்கள் உணர்ந்து உள்ளனரா? என்கின்ற வினா எழுகிறது. இதனால் சுவிஸ் மீண்டும் இத்தேர்தலை நடத்தக் கூடும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இப்போது சுவிஸின் உள்நாட்டு அமைச்சராக பதவி ஏற்றுள்ள திருமதி டிரையுஸ் வேலை இல்லாப் பிரச்சினைக்கு புதிய தீர்வுகளை கொண்டுவர இருப்பதாக அறிவித்திருக்கிறார். அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு முக்கிய காரணம் வேலையில்லாப்பிரச்சினை ஆகும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. சுவிஸின் வேலை இல்லாதவர்களின் புள்ளி விபரங்களை நோக்குவோமானால் இப்பிரச்சினை மேலும் சிறப்பாக விளங்கும். 1992 ஏப்ரலில் சுவிஸில் 79317 பேர் வேலைஇழந்தனர் அதே ஆண்டின் செப்ரெம்பரில் 1,02,081 பேராக அதிகரித்து மீண்டும் 1993ஜனவரியில் 1,41,500 ஆக அதிகரித்திருந்தது. அதேஆண்டு மார்ச்சில் 1, 50,000மிஞ்சியது. எனினும் 1993 முடிவதற்கிடையில் 1 80 000 பேரை தாண்டி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுவிஸில் சராசரிஒருநாளுக்கு வேலை இழப்போர் தொகை 400 எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த வேலை இழப்பு ஏற்பட்டவர்களுக்கு அவர்கள் பெற்ற ஊதியத்தின் 80 வீதத்தை அவர்கள் வேலை செய்த காலப் பகுதியை பொறுத்து அரசு வழங்கும். இதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவது அரசிற்கு பெரும் பிரச்சினையாக உள்ளது.

ஆரம்பத்தில் அரசியல் அந்தஸ்து கோரியவர்களை சுவிஸ் அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால், இப்போது கைவிரிக்கும் நிலையில் உள்ளது.

கள் திருமணம் செய்யும் நோக்கத்தில் சுவிஸ் வந்தவர்கள். திருமணம் செய்தார்களானால் அவர்களையும் உடன் திருப்பி அனுப்ப அரசால் முடியாது. மேலும் இந்த 800 அகதிகளும் இன்று பெரும் திகில் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் இலங்கையின் அமைதிப்பகுதி எனக்கருதப்படும் கொழும்பும் அதனை சூழவுள்ள பிரதேசங்களை சேர்ந்தவர்களும் பெருமளவில் அடங்குகின்றனர் என்று சுவிஸின் குரல் தகவல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யு. என். எச். சி.. ஆர். இன் சுவிஸ் பொறுப்பாளர் கொழும்பு எல்லாத்தமிழர்களுக்கும் பாதுகாப்பானது அல்ல என்று தெரிவித்துள்ளார். சுவிஸ் அகதிகளை திருப்பி அனுப்புவது முள்ளுக்கு மேல் நடப்பதற்கு சமமானது என்று சுவிஸின் பிரத்தியேக செய்தியாளர் ஒருவர் கருத்து வெளியிட்டார். இந்த 800 அகதிகளின் விண்ணப்பங்களை அரசுகுழு ஒன்று பரிசீலித்து வருகின்றது. இவர்களில் ஏற்றுக்கொள்ளப்படாத அகதிகளை உடன் நாட்டைவிட்டு வெளியேறும்படி கட்டாயப் படுத்தப்படுகின்றனர். இதற்கு அரசாங்கம் காலக்கெடுவாக மிகவும் குறைந்தகாலப் பகுதியையே வழங்குகின்றது.

இவ்வாறு திருப்பி அனுப்பப் படும் அகதிகளை கொழும்பில் வைத்து பராமரிப்பதற்கு சுவிஸ் தூதரகம் இலங்கை தூதரகத்தினூடாக நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்களுக்கு புதியதொழிலை ஆரம்பிப்பதற்கு என்றும் சுவிஸ் அரசு நிதியுதவி வழங்கவும் முன்வந்துள்ளது. இவர்களுக்கு இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படுமென சுவிஸ் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

எனினும் சுவிட்சர்லாந்திற்கு புதிதாக வரும் அகதிகளுக்கு சில நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக அகதிகளுக்கு பொறுப்பான அதிகாரி பீற்றர் ஆர்வென்ஸ் பேட்டி ஒன்றின் போது கூறினார்.

அதாவது பாஸ்போர்ட், அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்றவற்றை அகதி அந்தஸ்து கோருபவர் உடன் சமர்ப்பிக்கவேண்டும் அதனை நிறைவேற்ற அவ் அகதி தவறும் பட்சத்தில் அவ ஆகிறார். இவ்வாறு தலைமறைவாகுவோர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் செல்கிறார்கள் என்பது அண்மைக்கால ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆர்வென்ஸ் கூறுகிறார்.

ஆனால் சாதாரண சில குற்றங்களும் சுவிஸில் கிரிமினல்களாகக் கருதப்படுகின்றன. இந்தச் சட்டங்களை அகதி அந்தஸ்து கோரும்போதே அறிவுறுத்தப்படுகிறது. அவற்றைப் பார்த்தால்,

★ ஒருவர் இரண்டு தடவைகள் ஒரே பெயரில் பதிதல் அல்லது இரண்டு வெவ்வேறு பெயர்களில் ஒருவர் பதிதல் (இதனைக் கைரேகையைப் பயன்படுத்தி கொம்பியூட்டரின் உதவியுடன் அதிகாரிகள் கண்டுபிடிக்கின்றனர்.)

★ கடுமையான குற்றம்; இவற்றில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைப் பொருள் கடத்தல், சுவிஸின் பொது விதிகளை மீறல் என்பன அடங்கும்.

பரீட்சார்த்தமான முறையில் தான் அனுப்பவுள்ளது. மேலும் இவ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவர்களது பிரச்சினைகள் முடிந்த பின்னர் அடுத்த 17 000பேரது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு படிப்படியாக திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இத்தகைய 800 அகதிகளும் எதிர்வரும் ஜூன் மாதம் நாட்டை விட்டு வெளியேறும் படி கேட்கப்பட்டு ஜூலையில் திருப்பி அனுப்பப்படலாம் என பரவலாக நம்பப்படுகின்றது. எழுத்து மூலமாக நாட்டை விட்டுவெளியேறும்படியும் அதற்குரிய காலக்கெடுவும் குறிப்பிட்டு கடிதம் மூலமாகசம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

இதனை மேன் முறையீடு செய்யவும் அரசு அவர்களுக்கு குறைந்த காலப்பகுதி ஒன்றையே வழங்கியுள்ளது. இந்நடவடிக்கைகள் முடிந்த பின்னர் தான் மனிதாபிமான முறை

**செல்வ மதீந்திரன்**

★ அகதிகள் அந்தஸ்திற்குரிய விதிமுறைகளைப் பிழையான முறையில் பயன்படுத்துதல்.

★ இவ்வாறானகுற்றங்களில் ஈடுபடுவோர் சட்டப்படி விசாரிக்கப்பட்டு உடன் நாடு கடத்தப்படுகின்றனர். இவ்வாறானவர்களைத் திருப்பி அனுப்புவதற்கும், அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கும் எந்தவகையான தொடர்புகளும் இல்லை.

இந்தியா முதலில் தமிழகத்தில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்பத் தொடங்கியபோதே சுவிட்சர்லாந்தும் சில திட்டங்களைத் தீட்டிக் கொண்டது. இந்தியா தமிழர்களைத் திருப்பி அனுப்பும் போது ஏன் சுவிஸ் தமிழர்களைத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்ப முடியாது என்று சுவிஸின் பிரதான எதிர்க் கட்சி கேள்விக்கணை தொடுத்ததால் அரசுக்கு சங்கட நிலை தோன்றியது இவற்றிற்கு அடுத்தாற்போல் சுவிஸ் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் ''பி'' கார்ட் பெற்ற தமிழர்கள் உற

யில் ''பி'' கார்ட் பெற்றவர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமென இன்னொரு அதிகாரி அரசைக் கேட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தில் அகதிகளைப் பராமரிக்கும் அமைப்பான கரிதாஸ் அரசை இவ்வாறு கேட்டுள்ளது. நீண்டகாலமாக சுவிஸில் வாழ்பவர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்பதுதான். இதன் காரணம் என்னவெனில் இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு சிறுபிள்ளைகள் உண்டு அவர்கள் இலங்கை மொழியை இங்குள்ள பாடசாலைகளில் கற்றுக்கொள்ள முடியாததால் சுவிஸின் பிரதான மொழியைத்தான் பயில்கின்றனர். இவர்களை திருப்பி அனுப்பும்போது எதிர்காலப் பாதிப்புக்கள் நிறைய ஏற்படும் சாத்தியம் உண்டு என கரிதாஸ் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இந்த கோரிக்கைகளை எல்லாம் சுவிஸ் அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பது இதுவரை

யும் நாட்டின் நலன் கருதியும் நடப்பவர்களானால், பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சிக்கே ஆட்சியை அமைக்கும் உரிமையைக் கொடுத்திருக்க வேண்டும். இதேவேளை இவ்விரு மாகாணங்களிலும் ஐ. தே. க. தனது பெரும்பான்மையை நிரூபிக்கக் கூடிய அரசியல் சூழல் தற்போதைக்கு இல்லை என்பதும் எவரும்விளங்கிக்கொள்ள முடியாததல்ல.

ஆனால், ஆளுநர்கள் ஐ. தே. கட்சியை ஆட்சி அமைக்குமாறு அழைத்தமையானது தமது பதவிக்கே அவர்கள் ஏற்படுத்திய இழுக்காகும். இவர்களின் இந்நடவடிக்கையானது தனியாக ஐ. தே. கட்சிக்குத் தமது விசுவாசத்தை வெளிக்காட்டியது மட்டுமல்ல. சிறிலங்கா அரசியலமைப்பில், ஆட்சி அமைப்பது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் விதிகளை மீறிய செயலுமாகும்.

இதேவேளை ''மாகாண சபை ஆட்சியை அமைக்க யாரை அழைப்பது என்பது மாகாணங்களின் ஆளுநரைப் பொறுத்த விடயம்'' எனக் கூறுவதன் மூலம் இவ்விவகாரத்தில் தமக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா இதனை ஒதுக்கித் தள்ளியமை எவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி மாகாணங்களுக்குரிய ஆளுநர்களை நேரடியாக நியமிப்பது என்பதும், ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அவரின் ஏஜெண்டுகளாக மாகாணங்களில் அவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதும் அரசியலமைப்பிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆளுநர்களால் நியமனம் பெறும் முதல்வர்கள் நியமனத்திற்கும் தனக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனக் கூறுவதை எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. மாறாக, இது ஜனாதிபதி மேற்கொள்ளும் அரசியல் யாப்பிற்கு முரணானதும், ஜனநாயக விரோதமான செயல் என்றுமே கருதப்படும்.

இந்த வகையில் பார்க்கும்போது, டி. பி. விஜயதுங்காவும் கடந்த கால ஜனாதிபதிகளின் போக்கையே பின்பற்றுவதாகவே தெரிகின்றது. பேச்சொன்று, செயல் ஒன்று என்ற இந்த வகை நடவடிக்கையானது டி. பி. விஜயதுங்காவிற்கு அபகீர்த்தியையும், அவரின் பேச்சுக்களில் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துமே ஒழிய, அவரை ஒரு 'ஜனநாயக வாதியாக' காட்டிக் கொள்ள உதவப் போவதில்லை.

இவ்வாறான நிலையானது, பொதுவாகவே உலகில் மத்திய - மாகாண அரசுகளுக்கு இடையில் அதிகாரங்கள் வரையறுக்கப்படாத நாடுகளிலும் பெயரளவில் மாகாண சபை, மாநில அரசுகள் என்ற அமைப்புக்கள் இருக்கின்ற போதிலும், மத்திய அரசின் ஆளுநரிடம் அதிகாரங்கள் குவிந்துள்ள நாடுகளிலும், மற்றும் ஜனநாயக நாடுகள் எனக் கூறிக் கொண்டு 'ஜனநாயக மரபுகளை' துச்சமாக மதிக்கும் மூன்றாம் உலக நாடுகளிலும் நடைபெறும் ஒரு வழமையான அம்சமும் ஆகும்.

இருப்பினும் ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது இம் மாகாணங்களில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பக்குவமற்ற நிலையில் அக்கட்சி உள்ளதையே காட்டுவதாக உள்ளது. இவ்வாறாக சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கே முட்டுக்கட்டை போடும் இவ் ஐ தே. கட்சி அரசாங்கம் இந்நிலையில் தமிழருக்கு எவ்வாறு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும், அவர்கள் ஆட்சி அமைக்கவும் ஒத்துக் கொள்ளப் போகின்றது?

---

மைக்கு சுவிஸ் அரசு சொல்லும் காரணங்கள் இவர்கள் இந்திய ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளனர் என்பதாகும். எனினும் சுவிஸ் அரசு அகதிகளைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுப்பதற்கு இதைத் தவிர இன்னும் பல காரணங்கள் உண்டு.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்குக் காரணம் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும், இந்தியாவிலும் இருந்து வந்தவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டமை என்று சுவிஸ் அரசு கூறினாலும் நாட்டில் அதிகரித்து வரும் வேலையில்லாப் பிரச்சினைதான் இதற்குக் காரணம் ஆகும்

தற்போது சுவிஸ் பாரிய பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது. சுவிஸ் 1992 டிசம்பரில் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்துடன் சுவிஸ் இணைவதா? இல்லையா? என்னும் தேர்தல் இடம்பெற்றது. இதில் அரசு தோல்வி கண்டது. இத்தேர்தலில் 78. 3 வீதமான மக்கள் கலந்து கொண்டனர். இவற்றில் இணைவதற்கு ஆதரவாக 49. 7 வீத வாக்குகளும் இல்லை என்பதற்கு 50. 3வாக்குகளும் இடப்பட்டன.

மேலதிகமான 0. 6 வீதவாக்குகளால் இணைவதில்லையென சுவிஸ்மக்கள் தீர்மா

1,51,000 ஆக அதிகரித்திருந்தது. அதேஆண்டு மார்ச்சில் 1, 50,000மிஞ்சியது. எனினும் 1993 முடிவதற்கிடையில் 1 80 000 பேரை தாண்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுவிஸில் சராசரிஒருநாளுக்கு வேலை இழப்போர் தொகை 400 எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த வேலை இழப்பு ஏற்பட்டவர்களுக்கு அவர்கள் பெற்ற ஊதியத்தின் 80 வீதத்தை அவர்கள் வேலை செய்த காலப் பகுதியை பொறுத்து அரசு வழங்கும். இதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவது அரசிற்கு பெரும் பிரச்சினையாக உள்ளது.

ஆரம்பத்தில் அரசியல் அந்தஸ்து கோரியவர்களை சுவிஸ் அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால், இப்போது கைவிரிக்கும் நிலையில் உள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன தற்போது சுவிஸ் மக்கள் வெளிநாட்டவர்க்கு எதிராக இயங்குவதும் ஒரு காரணமாகும். ஜேர்மனியிலும் வெளிநாட்டவர்க்கு எதிரான ஊர்வலங்கள் அதிகளவில் இடம் பெறுவதும், அகதி முகாம்கள் எரிபபும் இடம்பெற்றது. இவற்றுக்கு சுவிஸ் விதிவிலக்கு இல்லை எனலாம்.

செப்ரெம்பர் 1992க்கு பின்னர் 800 அகதிகளில் பெரும்பாலானோர் பெண்கள். இவர்

கை எடுத்துளளது. இவர்களுக்கு புதியதொழிலை ஆரம்பிப்பதற்கு என்றும் சுவிஸ் அரசு நிதியுதவி வழங்கவும் முன்வந்துள்ளது. இவர்களுக்கு இராணுவ மற்றும் அரசியல் ரீதியில் பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படுமென சுவிஸ் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

எனினும் சுவிட்சர்லாந்திற்கு புதிதாக வரும் அகதிகளுக்கு சில நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக அகதிகளுக்கு பொறுப்பான அதிகாரி பீற்றர் ஆர்வென்ஸ் பேட்டி ஒன்றின் போது கூறினார்.

அதாவது பாஸ்போர்ட், அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்றவற்றை அகதி அந்தஸ்து கோருபவர் உடன் சமர்ப்பிக்கவேண்டும் அதனை நிறைவேற்ற அவ் அகதி தவறும் பட்சத்தில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். ஆயினும் பாஸ்போர்ட் கொடுத்தால் எந்த நாடுகளில் இருந்து வந்தவர்கள் என்பது காட்டிக்கொடுக்கப்படும் என்பதால் பெரும்பாலான அகதிகள் பாஸ்போர்ட் கொடுப்பதில்லை என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒரு நிராகரிக்கப்பட்ட அகதியை நாட்டைவிட்டு வெளியேறும்படி பணித்தால் அவ் அகதி உடனே தலைமறைவு

கடத்தப்படுகின்றனர். இவ்வாறானவர்களைத் திருப்பி அனுப்புவதற்கும், அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கும் எந்தவகையான தொடர்புகளும் இல்லை.

இந்தியா முதலில் தமிழகத்தில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்பத் தொடங்கியபோதே சுவிட்சர்லாந்தும் சில திட்டங்களைத் தீட்டிக் கொண்டது. இந்தியா தமிழர்களைத் திருப்பி அனுப்பும் போது ஏன் சுவிஸ் தமிழர்களைத் தாயகத்திற்குத் திருப்பி அனுப்ப முடியாது என்று சுவிஸின் பிரதான எதிர்க் கட்சி கேள்விக்கணை தொடுத்ததால் அரசுக்கு சங்கட நிலை தோன்றியது இவற்றிற்கு அடுத்தாற்போல் சுவிஸ் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் ''பி'' கார்ட் பெற்ற தமிழர்கள் உறவினர்களை பார்க்க வேண்டும் என்ற நிலையில் இலங்கைக்கு சென்று வந்தனர். இவர்களால் இலங்கைக்கு போய்வர முடியுமென்றால் ஏன் ஏனைய தமிழகதிகளால் தாயகத்திற்கு போகமுடியாது என சில சுவிஸ் பிரமுகர்கள் கருதினார்கள். இவற்றின் பிரதிபலிப்புதான் இன்றைய அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை எனலாம்.

எனினும் சுவிஸ் இலங்கை அகதிகளை முதற்கட்டமாக

சுவிட்சர்லாந்தில் அகதிகளைப் பராமரிக்கும் அமைப்பான கரிதாஸ் அரசை இவ்வாறு கேட்டுள்ளது. நீண்டகாலமாக சுவிஸில் வாழ்பவர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்பதுதான். இதன் காரணம் என்னவெனில் இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு சிறுபிள்ளைகள் உண்டு அவர்கள் இலங்கை மொழியை இங்குள்ள பாடசாலைகளில் கற்றுக்கொள்ள முடியாததால் சுவிஸின் பிரதான மொழியைத்தான் பயில்கின்றனர். இவர்களை திருப்பி அனுப்பும்போது எதிர்காலப் பாதிப்புக்கள் நிறைய ஏற்படும் சாத்தியம் உண்டு என கரிதாஸ் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. இந்த கோரிக்கைகளையெல்லாம் சுவிஸ் அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பது இதுவரை கேள்விக்குறியாகவே உள்ளது.

சுவிட்சர்லாந்தும் தமிழர்களை திருப்பி அனுப்புதல் எனும் நிலையை ஆரம்பித்திருப்பதால் நோர்வேயும் இதனைப்பின்பற்றியுள்ளது. நோர்வேயில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட ஒரு பகுதி தமிழர்களை திருப்பி அனுப்ப முடிவுசெய்யப்பட்டது. மேலும் இம்முடிவு ஜெனிவா ஒப்பந்தப்படி செய்ய நோர்வே உத்தேசித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

# சிறையிலிருக்கும் புலிகள் தப்புவது கவலை தருகிறது

## - மத்திய அமைச்சர் சவான்

(டில்லி)

தமிழ்நாட்டின் பல்வேறு சிறைகளிலுமிருந்துவிடுதலைப் புலிகள் தப்பியிருப்பதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் எஸ். ? . சவான் கவலை தெரிவித்துள்ளார். புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; இவ்வாறு தப்பியோடியவர்களில் சிலர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் அரச தரப்பு சாட்சியங்களாவர் என்றும், தமிழக அரசுக்கு மத்திய அரசு புலிகள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்கின்ற போதும் தமிழக முதல்வர் அதில் உறுதியற்ற நிலை கொண்டிருப்பது போல் தோன்றுவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் தமிழக முதல்வரே விடுதலைப் புலிகளின் ஓர் இலக்காக இருக்கின்ற போதிலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியது என்றும் தெரிவித்தார். மேலும் ஜெயலலிதாவின் பாதுகாப்புக்காக மட்டுமன்றி தமிழகத்தில் விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்த தேவையான எல்லா உதவிகளையும் மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

---

சிறையிலிருந்து தப்பிய

# சார்ள்ஸை கைது செய்ய சிறப்பு பொலிஸ்பிரிவு

## - கமிஷனர் ராஜ கோபாலன்

(சென்னை)

சென்னை சைதாப்பேட்டை சிறையிலிருந்து தப்பிச் சென்றுவிட்ட சார்ள்ஸ் நவாசை மீண்டும் கைது செய்ய சிறப்பு பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக சென்னை நகர பொலிஸ் கமிசனர் ராஜகோபாலன் கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் விரைவில் சார்ள்ஸ் நவாஸ் மீண்டும் கைது செய்யப்படுவார் எனவும் அவரைக்கைது செய்ய உதவக்கூடிய தகவல் அளிப்போருக்கு சன்மானம் வழங்க சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவர் வி. ஆர். கார்த்திகேயன் இணங்கியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே தமிழகசிறப்பு காவல்படையின் எட்டாவது பட்டாலியனைச்சேர்ந்த தலைமைக்காவலர் ஒருவர் உட்பட ஆறு பொலிசார் பணியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் மீது இலாகா மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# புலிகள் தொடர்பாக எந்தத் தளர்வும் இல்லை

## முதல்வர் ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் மாநில அரசு எந்தத் தொய்வையும் காட்டவில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் பிரதமர் நரசிம்மராவை புதுடில்லிக்கு வழியனுப்பி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தமிழகத்தில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுவது தவறு என்றும் அண்மையில் தீவிரவாதிகள் தப்பிச் சென்ற சம்பவங்கள் குறித்து தனக்கு சில ஐயங்கள் இருப்பதாகவும் ஆனால் அது குறித்து இப்போது எதையும் கூற விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

---

சார்ள்ஸ் நவாஸ் பற்றிய தகவலுக்கு

# சன்மானம் அளிப்பதாக உறுதி கூறவில்லை

## சிறப்பு புலனாய்வுக் குழு

சென்னை சைதாப்பேட்டை தனி முகாமில் இருந்து ராஜீவ் காந்தி கொலை வழக்கின் ஒரு சாட்சியமான சார்ள்ஸ் நவாஸ் தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பாக சிறப்பு புலனாய்வுக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சார்ள்ஸ் நவாஸ், சிறப்பு புலனாய்வுக் குழுவின் பாதுகாப்பில் இருந்ததாகக் கூறப்படுவதை மறுத்திருப்பதுடன், இவரைப் பற்றிய தகவல்களை அளிப்போருக்கு சன்மானம் வழங்கப்படும்எனக் குழு அறிவிக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சென்னை சைதாப்பேட்டையில் இருக்கும், இலங்கை அகதிகளுக்கான முகாம் தமிழ்நாட்டிலிருக்கும் ஏனைய இலங்கை அகதி முகாம்களைப் போலவே மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒரு தாசில்தாரின் பொறுப்பில் செயற்பட்டு வந்ததாகவும் விசேட புலனாய்வுக்குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

ஈழநாதம்

# இந்திய உள் விவகாரத்தில் அமெ. தலையிடக் கூடாது

## - அர்ஜூன்சிங்

(டில்லி)

காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்நாட்டு பிரச்சினையே இதில் அமெரிக்கா தலையிடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜூன் சிங் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசம் லக்னோவில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் அர்ஜூன்சிங் அமெரிக்க அரசுப் பிரதிநிதி ஜான் மலட் புதுடில்லியில் தெரிவித்த சில கருத்துக்கள் பற்றிக் குறிப்பிடுகையில்: மேலும் காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்ததே. அது முடிவானது. மாற்ற முடியாதது என்றும் தெரிவித்தார்.

காவிரி நீர்ப்பிரச்சினை

# தமிழகத்தின் கோரிக்கை நடுவரால் நிராகரிப்பு

[சென்னை]

காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக மாநிலத்தின் சரடி நத்தனருகே என்னும் இடத்தில் அணைகட்டி ஏற்றப் பாசனம் செய்யும் கர்நாடக அரசின் திட்டத்திற்கு இடைக்கால தடைஉத்தரவு விதிக்கும்படி காவிரி நடுவர் மன்றத்திடம் தமிழக அரசு விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

காவிரியிலோ, அதன் கிளை நதிகளிலோ புதிய அணைக்கட்டு திட்டம் எதையும் நிர்மாணிப்பதற்கு இடைக்கால தடை உத்தரவு விதிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இடைக்கால தடை விதிக்கப்படுவதற்கு புதிய - உரிய காரணம் எதையும் தமிழக அரசு தெரிவிக்கவில்லை என்று கூறியே இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதா விஜயங்கள் ரத்து

சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று உதகமண்டலத்திற்கும், கொடைக்கானலுக்கும் செல்வதாக இருந்த பயணத்தை ரத்துச்செய்திருந்தார்.

ஊட்டியில் மலர் கண்காட்சி உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக நேற்றுக்காலை செல்ல இருந்தார்.

இவர் சுற்றுப் பயணத்தைத் திடீரென ரத்துச் செய்ததற்கான காரணம் தெரியவரவில்லை.

# தமிழக அரசைக் கலைக்க போதிய காரணம் உள்ளது

## வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் ஆட்சியிலுள்ள அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்கப் போதுமான காரணங்கள் உள்ளதாகவும்,

கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்போது விடுதலைப் புலிகளுக்கும் தி. மு. கழக அரசிற்கும் இடையில் இருந்த நெருக்கம் போன்று இப்போது அ.இ. அ. தி. மு. கழக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்இருப்பதாகவும்தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகள் சிறையில் இருந்து தப்பித்து சென்றுள்ள சம்பவம் தொடர்பாக தமிழக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக மீண்டும் குற்றம் சாட்டியிருக்கின்றார்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி.சவான் வெளியிட்டுள்ள கருத்து தாம் கூறிவந்த புகாரை நியாயப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. எனவும் அவர் தெரிவித்தார்.

# போட்டி

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வட்டுக்கோட்டை சங்கரத்தை பொது விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு ந. பரமசிவம் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் தமிழீழ கல்விக் கழக உதவிப் பொறுப்பாளர் திரு அருண்மாஸ்டர், இளைப்பாறிய அதிபர் திரு சு. சிவவாகீசர், காரை கொத்தணி அதிபர் திரு செ. தேவதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

★

யாழ். பூம்புகார் பவானி (நித்திலா) கல்விக் கூடத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 1993 நாளை பிற்பகல் 2. 00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

★

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பண்டத்தரிப்புக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி மெய்வல்லுநர் போட்டிகளில் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சார்ந்த 10 கொத்தணிகளிலும் இடம் பெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்று முன்னணிவகித்த போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

★

சங்கானை உதவி அரச அதிபர்பிரிவைச் சேர்ந்த சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கமும் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையமும் இணைந்து நடாத்தும் சிறுவர், சிறுமியரின் விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2. 00 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (41)

## ஈமக்கிரியைக்கு அன்பளிப்பு

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மரணிப்பவர்களின் ஈமக்கிரியைச் செலவுக்காக கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தலா ஐந்நூறு ரூபாவை வறியவர்க்கு அன்பளிப்புச் செய்து வருகிறது.

மேற்படி அன்பளிப்புப் பணம் சண்டிலிப்பாய் உதவி

# எதிரணி மாகாண ஆட்சியை கலைக்க அரசு முயற்சி

## பிரேமச்சந்திர தெரிவிப்பு

(கொழும்பு)

''வடமேல்மாகாணம்,தென் மாகாணம் ஆகியவற்றிற்கு ஆளும் கட்சியின் சார்பில் முதல் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை ஒரு ஜனநாயக விரோத செயலாகும்'' இவ்வாறு ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் செயலாளர் திரு. பிரேமச்சந்திர கூறியுள்ளார்.

பி. பி. ஸிக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்போதைய அரசு மாகாண அரசாட்சியை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவரமுயற்சிக்கின்றது.

ஏற்கனவே வட-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு விட்டது. எதிர்காலத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளில் எதிரணிக்கட்சிகளின்ஆட்சியின் கீழுள்ளமாகாணங்களில்குழப்பத்தை ஏற்படுத்திமாகாணசபைகளைக் கலைத்துவிட்டு தனியே ஆளும் கட்சி மட்டும் மாகாண ஆட்சியை தொடர்ந்து நடாத்துவதற்கு வேண்டியமுன் ஏற்பாடுகளை அரசுமேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தென், வடமேல் மாகாணசபை நிலை

வடக்கு – கிழக்குக்கு வெளியே

# உளவுப் பிரிவின் செயற்பாடு; எதுவும் கூற முடியாது

வடக்கு கிழக்கில் உளவுப் பிரிவு சிறப்புறச் செயற்படுகிறது. ஆனால் ஏனைய பகுதி குறித்து என்னால் எதுவும்கூற முடியாது என கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் என். அங்கமன தெரிவித்தார்

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொலை சம்பந்தமாக அவரது வீட்டில் வேலை செய்தவரே இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் உளவுப் பிரிவு என்ன செய்கிறது எனப் பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் அவ்வாறு கூறினார்.

'ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைச் சம்பவத்திற்கு முன்னதான உளவு நடவடிக்கைகள் குறித்து தன்னால் எதுவும் கூற முடியாது என மேலும் கூறினார்.

''எமது உளவுப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்தே செயற்படுகிறது'' எனவும் அவர் தெரிவித்தார்.

# வடக்குக் கிழக்கு பிரச்சினை தீர்வே இன்று முக்கியம்

## சந்திரிகா தெரிவிப்பு

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தும் பொருட்டு தன்னால் ஆன சகல நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதாக மேல் மாகாண முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

நேற்று ஏ.எவ்சிக்கு அளித்த செவ்வியில் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வே இன்று முதல் தேவைப்படுவதாகவும், மேல் மாகாண சபை பெறும் அதிகாரங்களைக் கொண்டே எவ்வளவு தூரம் அதிகாரங்கள் மாகாண சபைக்கு உள்ளது என்பதை உறுதிசெய்ய முடியும் என்றும் எனவே மேல் மாகாணம் பல அதிகாரங்களை பகிரும் மாகாணமாக திகழப் போவதாகவும் கூறினார்.

# வவுனியா ரயிலில் கத்திமுனையில் கொள்ளை

(வவுனியா)

கொழும்பிலிருந்து கடந்த திங்கள்இரவு வவுனியாநோக்கி வந்த தபால் புகையிரதத்தில் ஒரு தம்பதியர் விலை உயர்ந்த பொருள்கள் அடங்கிய சூட்கேஸ் ஒன்றை பறிகொடுத்தனர்.

ரயில் கம்பஹாவைத் தாண்டி வந்துகொண்டிருந்த போது இருவர் இத் தம்பதியரை அணுகி கத்திமுனையில் மிரட்டி இக் கொள்ளையில் ஈடுபட்டனர். பின்னர் இவர்கள் இரயிலிருந்து குதித்து தப்பி ஓடிவிட்டனராம்.

# தென்னை முறிந்து வீழ்ந்து சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப்பகுதியில்நேற்று தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

இச் சம்பவத்தின்போது நாகராசா தயாபரன் (வயது 4) என்பவரே படுகாயமடைந்தவராவார். கிணற்றடியில் தாயார் குளிக்கவார்த்துக் கொண்டிருந்தபோது அருகில் நின்ற தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததால் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் அச்சுவேலி மருத்துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ்மூலம் யாழ்.

## வகுப்புகள் இடமாற்றம்

ஆரிய திராவிட பாஷ அபிவிருத்திச் சங்கம் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் இணைந்து நடாத்தும் பண்டிதர் வகுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் யா/நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்திலிருந்து யாழ் கல்வித்திணைக்கள வளவில் இயங்கும்யா/நல்லூர் சாதனா பாடசாலைக்கு இடமாற்றியுள்ளதைத் தெரியப் படுத்துவதுடன் தொடர்ந்தும் வகுப்புக்கள் நடப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

ஊரெழு-சக்திபுரம்சிவபூரணி காளியம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ் உற்சவம் தொடர்ந்து பதினொரு நாட்கள் திருவிழா நடைபெற்று பன்னிரண்டாம் நாள் தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும்.

# எதிர்க்கட்சிக் கூட்டணி

# நினைவஞ்சலி

# தமிழக அரசைக் கலைக்க

# போதிய காரணம் உள்ளது

## வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் ஆட்சியிலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்கப் போதுமான காரணங்கள் உள்ளதாகவும்,

கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்போது விடுதலைப் புலிகளுக்கும் தி. மு. கழக அரசிற்கும் இடையில் இருந்த நெருக்கம் போன்று இப்போது அ.இ. அ. தி. மு. கழக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்இருப்பதாகவும்தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகள் சிறையில் இருந்து தப்பித்து சென்றுள்ள சம்பவம் தொடர்பாக தமிழக அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக மீண்டும் குற்றம் சாட்டியிருக்கின்றார்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி.சவான் வெளியிட்டுள்ள கருத்து தாம் கூறிவந்த புகாரை நியாயப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. எனவும் அவர் தெரிவித்தார்.


## வீடியோ, வானொலி நடிகர்கள் தேவை

வீடியோ படங்களிற்கும், வானொலி நாடகங்களிற்கும் குரல் கொடுக்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். குரல் கொடுப்பதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. 30-05-1993 இற்கு முன்விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: விளம்பர இலக்கம்-189

மே/பா, 31, ஈழநாதம்

(4942) மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.



## பிலிப்ஸ் ஞாபகார்த்த வைத்திய பராமரிப்பு விடுதி

எமது சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்படி விடுதியில் தங்கவிரும்பும் நோயாளர்கள் சங்கப் பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.

புற்றுநோயில்லாத நீண்டகால நோயாளர்களும் பராமரிப்புக்காக அனுமதிக்கப்படுவர்.

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்,
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
21-05-93. (சி-6673)



## ஸ்ரீதர் திரையரங்கில்

## In the Line of Duty

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6575]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 23 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## நினைவஞ்சலி கூட்டம்

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 5ஆம் மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களுடைய நினைவஞ்சலி கூட்டம் நாளை திங்கட்கிழமை இரவு 8மணிக்கு புலோப்பளை பிரதான் சன சமூக நிலையத்தில் பளை வட்டப் பொறுப்பாளர் திரு. அன்பு தலைமையில் இடம்பெறும்.

இதில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்கள் இதனைத் தொடர்ந்து தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன. (86)

## அதிபர்களுக்கான கூட்டம்

மருதனார்மடக் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு யா/ இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் பாடசாலை மாணவர் உணவுமுத்திரை. தமிழீழப் பொதுககல்வித் தேர்வு சம்பந்தமாகக் கலந்துரையாடவிருப்பதால் தவறாது சகல அதிபர்களையும் வருகைதரும் வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## தமிழ்த் தின போட்டி

(வடமராட்சி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் தமிழ்த் தினப் போட்டிகள் நடைபெற்றன. (யோ)

சங்கானை உதவி அரச அதிபர்பிரிவைச் சேர்ந்த சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கமும் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையமும் இணைந்து நடாத்தும் சிறுவர், சிறுமியரின் விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (41)

## ஈமக்கிரியைக்கு அன்பளிப்பு

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மரணிப்பவர்களின் ஈமக்கிரியைச் செலவுக்காக கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தலா ஐந்நூறு ரூபாவை வறியவர்க்கு அன்பளிப்புச் செய்து வருகிறது.

மேற்படி அன்பளிப்புப் பணம் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் வறியவர்களுக்குக் கிடைப்பதனால் அங்குள்ள மக்களில் இறந்தவர்களது அந்திய கால கிரியைகள் தாமதமின்றி நடைபெற வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

### தேசிய

அவர்களே. இந்த இலக்கில் எமது தேசத்து கலை இலக்கிய படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

போராட்ட வாழ்வைச் சித்திரிக்கும் கலைப்பணியில் முல்லை மாவட்ட கலைஞர்கள் முன்னுதாரணமாக நிற்கிறார்கள். முன்னரும் மாவீரர் நாளையொட்டி 'தமிழோசை' என்ற கலைப்படைப்பை உருவாக்கிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தனர். இன்று ''இது எங்கள் தேசம்'' என்ற அன்னை பூபதியின் வரலாற்றை பின்னணியாகக் கொண்டு இந்தக் கலைப் படைப்பை உருவாக்கியுள்ளனர். இயல்பாகவே கலைஞர்களுடன் மிக நெருக்கமான உறவை வழிவழியாகக் கொண்டிருக்கும் முல்லை மண்ணில் இருந்து வெளிவரும் இந்தப் படைப்பையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். அனைத்துக் கலைஞர்களையும் பாராட்டுகின்றோம. மேலும் மேலும்இவர்களதுகலைப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

காலத்தின் குரலாக, ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை எதார்த்தமாக சித்திரிக்கும் இந்தக் கலையாக்கம் எமது மககளின் இதயங்களைப் பற்றிக்கொள்ளும் என்பது திண்ணம்.

### திலக்

ஜெனரல் சி.ஜே அபயரட்ணா பதில் கடமைப் பொறுப்பை ஏற்குமாறு இராணுவத் தலைமையகத்தால் பணிக்கப்பட்டுள்ளார்.

ந்து கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு

## வவுனியா ரயிலில் கத்திமுனையில் கொள்ளை

(வவுனியா)

கொழும்பிலிருந்து கடந்த திங்கள்இரவு வவுனியாநோக்கி வந்த தபால் புகையிரதத்தில் ஒரு தம்பதியர் விலை உயர்ந்த பொருள்கள் அடங்கிய சூட்கேஸ் ஒன்றை பறிகொடுத்தனர்.

ரயில் கம்பஹாவைத் தாண்டி வந்துகொண்டிருந்த போது இருவர் இத் தம்பதியரை அணுகி கத்திமுனையில் மிரட்டி இக் கொள்ளையில் ஈடுபட்டனர். பின்னர் இவர்கள் இரயிலிருந்து குதித்து தப்பி ஓடிவிட்டனராம்.

### தென், வடமேல் மாகாணசபை நிலை

## எதிர்க்கட்சிக் கூட்டணி நேற்றுக்கூடி ஆராய்வு

(கொழும்பு)

வடமேல், தென் மாகாண சபைகளின் ஆளுநர் ஐக்கிய தேசிய கட்சியினரை ஆட்சி அமைக்குமாறு கூறியமை தொடர்பாக எழுந்த நிலையை ஆராய நேற்று எதிர்க்கட்சியாளர் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சகல எதிர்த்தரப்பு உறுப்பினர்களும் கலந்து கொண்டதாக தெரிய வருகின்றது.

### காலப்பதிவு

சுதந்திரத்தை விற்றுவிடவும் கூடும். சில நாடுகளில் இப்படியும் நிகழ்ந்துள்ளது என்றார்.

இதனால் எம் மத்தியில் காலப்பதிவுஇலக்கியம் படைக்கப்படவேண்டும் எழுதும் ஆற்றல் உள்ளோர் அனைவரும் தமது திறமைகளை வெளிக்கொணரவேண்டும். நாம் சர்வதேச மட்டத்துக்கு எழுத வேண்டும் என்றில்லை. எம் கண்முன் நடக்கின்ற நிகழ்வுகளை கவிதையாகவோ நாவலாகவோ நாம்படைக்க வேண்டும். காலபபதிவு இலக்கியத்தின் தேவையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்றார்.

### அரசாங்க

விசேட பொலிஸ் அதிரடிப் படைப் பிரிவு ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவுக்கும் வழமையான பாதுகாப்பு ஒழுங்குகளுடன் பொலிஸ் அதிரடிப்படையும் பாதுகாப்பு வழங்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

### கொழும்பு

யும் பார்வையிட்டு தொண்டர்கள், உறுப்பினர்கள், ஊழியர்களிடம் உரையாற்றுவார்.

இதற்கிடையில் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கொழும்பு தலைமையகத்தின் தலைவர் இங்கு வருவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

மாகாணமாக திகழப் போவதாகவும் கூறினார்.

டாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இவ் உற்சவம் தொடர்ந்து பதினொரு நாட்கள் திருவிழா நடைபெற்று பன்னிரண்டாம் நாள் தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும்.

## தென்னை முறிந்து வீழ்ந்து சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப்பகுதியில்நேற்று தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

இச் சம்பவத்தின்போது நாகராசா தயாபரன் (வயது 4) என்பவரே படுகாயமடைந்தவராவார். கிணற்றடியில் தாயார் குளிக்கவார்த்துக் கொண்டிருந்தபோது அருகில் நின்ற தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததால் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் அச்சுவேலி மருத்துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ்மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இவர் மாற்றப்பட்டுள்ளார். தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (சி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 21-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9498

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-6452, 26-2585, 26-3937, 41-6933, 27-3910, 24-5496, 26-7546, 41-9166, 28-2212, 24-9744, 26-6197, 26-4139, 24-7623.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-7041, 41-5178, 41-9791, 26-7949, 24-9938, 27-0802, 27-5099.

### 22-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9514

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

22-3611, 28-1128, 42-7312, 24-5967, 24-8429, 24-3594, 26-2827, 24-4350, 26 8138, 26-5760, 26-0767, 22-6468. 24-7628, 27-2089, 24-6438,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-7081, 41-9659, 26-8484, 27-7419, 26-6309, 22-4895, 24-6448, 26 6775, 27-5197, 24-0528, 41-9652, 28-2511, 27-5823, 26-9611, 43-0517, 27-6769, 41-1227.


## மரண அறிவித்தல்

## திருமதி அன்னப்பிள்ளை வேதலிங்கம்

வேவில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை வேதலிங்கம் 20-05-93 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமச் சடங்குகள் 24-05-93 (நாளை) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, தகவல்
சாவகச்சேரி. விஜயதாஸ் [பேரன்]
(4941)